பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை 25.03.2025 கதிர் 137

## இனி இது ரகசியம் அல்ல!

பிரிட்டன் திடீரென இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதிகள் மீதும் ஒட்டுக் குழுத் தலைவரான கருணா மீதும் தடைகளை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு ☞2

### திஸ்ஸ விகாரையை எதிர்க்கும்

## “இனவாதிகளுக்கு அடிபணிகிறது” ஆளும்தரப்பு மீது கடும் விமர்சனம்

சிங்கள பௌத்த நாட்டில் திஸ்ஸ விகாரையின் பூஜை வழிபாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் இனவாதிகளுக்கு ஆளும்தரப்புஅடிபணிந்துசெயற்படுகிறது. இதுஆளும்தரப்பின்கோழைத்தன்மையை வெளிப்படுத்துகிறது என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில்நேற்றுசெய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை தையிட்டி திஸ்ஸ விகாரையில் ஞாயிற்றுக்கிழமை புதிதாக ஒரு கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது 29 பௌத்த பிக்குகள் பூஜை வழிபாட்டில் கலந்துக்கொண்டிருந்தனர். இவர்களுக்கு மதிய உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகிய நிலையில் காலை 07 மணியளவில் விகாரையின் முன்பாக தமிழ் இனவாதிகள் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு கூடியிருந்த இராணுவத்தினர் உடனடியாக விகாரை வளாகத்தில் இருந்து வெளியேறினர்.

இனவாதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ☞2

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியாக ஜயந்தவின் பெயர் பரிந்துரை

ஐக்கியஅமெரிக்காவின்நியூயோர்க்கில் அமைந்துள்ளஐக்கியநாடுகள்சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த சந்திரசிறி ஜயசூரியவின் பெயரை உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

இரண்டு புதிய தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்ஒருவரின்நியமனத்திற்கு அண்மையில்கூடியஉயர்பதவிகள்பற்றிய குழுவின் பரிந்துரை வழங்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்காவின் ☞2

## 10 லட்சம் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டன

நாட்டிலுள்ள சுமார் 10 இலட்சம் குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களின் ஊடாக குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டவர்களின் கைவிரல் அடையாளங்களே டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் ஊடாக குற்றவாளி ஒருவர் மீண்டும் குற்றம் புரிந்தால் மிகக்குறுகிய நேரத்தில் அவரது தகவல்களைபெற்றுக்கொள்ளமுடியுமெனபொலிஸார் ☞2

## 2 கொலைச் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டனர்

மாத்தறை, தேவேந்திரமுனை ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் முன்புறம் உள்ள சிங்காசன வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ☞2

# இலங்கை இராணுவ, கடற்படைகளின் முன்னாள் தளபதிகள் மீது பிரிட்டன் தடை

### ஒட்டுக் குழுத் தலைவர் கருணாவும் சிக்கினார்

**போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள இலங்கையின் மூன்று இராணுவ உயர் அதிகாரிகள் மீதும் இராணுவத் துணைப் படைத் தலைவரான கருணா மீதும் பிரிட்டன் தடைகளை விதித்துள்ளது. நேற்று திடீரென இது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

**இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியும் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக இருந்தவருமான ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெகத் ஜெயசூரிய மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயகத்தின் இராணுவத் தளபதியும் பின்னர்**



**அவ்வியகத்துக்கு எதிராக இலங்கை இராணுவத்தின்** ☞2

## மின்சார சட்டத் திருத்தம் குறித்து அமைச்சுக்கள் இடையே முரண்

மின்சார சட்ட திருத்தம் தொடர்பில் நிதி அமைச்சிற்கும் மின்சக்தி அமைச்சிற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. மின்சக்தித் துறை மறுசீரமைப்பு நாட்டுக்கு தகுந்த வகையில்இடம்பெறவேண்டும். ஆனால் ஆளும்தரப்புப்பழைய பாதையிலேயே பயணிக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சார சட்டத் திருத்தம் தொடர்பில் நிதி அமைச்சிற்கும் மின்சக்தி அமைச்சிற்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின்போது ஒரு விடயத்தையும் தற்போது ☞2

## பிரித்தானிய பிராந்தியப் பணிப்பாளருடன் சுமந்திரன் நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு

பிரித்தானிய வெளிவிவகார, பொதுநலவாயமற்றும்அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ- பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்புநேற்றுகொழும்பில் ☞8



## உயிர்த்த ஞாயிறு வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை நடத்திய இரண்டு தற்கொலை குண்டுதாரிகள் பற்றிய தகவல்களை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தெமட்டகொடை, மஹாவிலவைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரானமொஹமட்இப்ராஹிமுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணையை ஜூலை 2 வரை கொழும்பு மேல் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்கு நேற்று ☞8

## தமது அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யும் புதிய அரசமைப்பே தமிழரின் எதிர்பார்ப்பு

### பிரிட்டிஷ் இந்தோ- பசுபிக் பணிப்பாளரிடம் சுமந்திரன் தெளிவுபடுத்தல்

வடக்கு, கிழக்கு மக்கள் தமது அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படக்கூடிய புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்என்றுவிரும்புகிறார்கள். அதிகாரங்கள் பகிரப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான நிரந்திரமான தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். அதற்காகவே அவர்கள் தொடர்ச்சியாகத் தேர்தல்களில் ஆணை வழங்கி வருகின்றார்கள் என்று நேற்றுத் தான் சந்தித்த பிரிட்டன் பணிப்பாளரிடம் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நேற்றுத் திடீரென வந்தபோதும், இது ஒரு திடீர் முடிவு அல்லவென்று விடயமறிந்த தரப்புக்கள் சுட்டிக்காட்டுகின்றன. அநுரவின் ஆட்சி தொடர்பான நீண்ட பகுப்பாய்களின் பின்னர் கடந்த கால ஆட்சியாளர்களின் போக்கிலிருந்து அநுர தரப்பு விலகுவதற்கான எந்தவித சமிக்ஞைகளையும் காட்டாததன் விளைவாகவே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தத் தரப்புக்கள் கூறுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகிவிட்டது. இதுவரையில் அங்கு இலங்கை தொடர்பான விடயங்களைத் தலைமை தாங்கி வந்தது அமெரிக்காதான். இப்போது அது வெளியேறியுள்ள நிலையில் அந்தத் தலைமையிடத்தை நிரப்பவேண்டிய நிலையில் பிரிட்டன் உள்ளது. எனவே அநுர அரசிடமிருந்து அடுத்த ஐ.நா. தீர்மானத்திற்கு முன்பாக குறிப்பிடத்தகுந்த காத்திரமான சமிக்ஞைகள் எதிர்பார்க்கப்பட்டன.

இதற்காகவே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததும் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் ஆளும்தரப்புக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்தக் கால அவகாசத்தை இலங்கை ஆளும்தரப்பு மதிக்கவில்லை. இதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் சென்ற அதே பாதையில் பயணிப்பதிலேயே அநுர தரப்பும் குறியாக இருக்கின்றது. போர்க் குற்றங்களுக்குப்பொறுப்புக்கூறுவதில்அவர்கள் எந்த அக்கறையுமற்ற இருக்கின்றார்கள். உள்ளூர்பொறிமுறைஊடாகஒருவிசாரணை நடத்தப்படும் என்று அரசுத் தலைவர் கூறினாலும் அதற்கான அறிகுறிகளையும் அவர் காட்டவில்லை.

போதாதற்கு, மனித உரிமைகள் பேரவையில் பிரிட்டன் உள்ளிட்ட இணைத் தலைமை நாடுகள் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கும் அடுத்த தீர்மானத்திற்கு ஒத்துழைப்பதற்கும், அதனோடு இணங்கிச் செல்வதற்கும்கூட இலங்கை ஆளும்தரப்பு மறுக்கின்றது. இது தொடர்பில் ஆளும்தரப்பினரோடு பிரிட்டன் தரப்பில் பல கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. பொறுப்புக்கூறலை முன்னேற்றுகின்ற விடயத்தில்சர்வதேசத்தோ-டுஒத்துழைக்கும்படி விடுக்கப்பட்ட அழைப்புக்களையெல்லாம் ஆளும்தரப்பு நிராகரித்துவிட்டது.

படையினரைக் காட்டிக்கொடுக்க முடியாது என்கிற நிலைப்பாட்டே ஆளும்தரப்புக்குள் தொடர்வதன்காரணமாகவே, ஆளும்தரப்புக்கு தெளிவான உறுதியான செய்தியை வழங்கும் வகையில் பிரிட்டனின் தடை உத்தரவு வந்துள்ளது என்று கூறப்படுகின்றது.

பிரித்தானியாவின் இந்தோ - பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச்செயலர் கத்தரின் வெஸ்ட் ஜனவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்தார். அப்போதும் ஆளும்தரப்புடன் இந்த விவகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இலங்கைப் பிரதமர், அயலுறவு அமைச்சர், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் இலங்கையின் வடக்கில் உள்ள அரசியல் தலைவர்களைச் சந்தித்து அவர் பேசியிருந்தார். ஆனாலும் ஆளும்தரப்பு எதற்கும் இணங்கி வராத நிலையிலேயே இப்போது பிரிட்டன் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவு மூலம் போர்க் களத்தில் இறுதி நாள்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புவாய்ந்தவர்களாக இருந்தார்கள் என்றுகருதப்படும்இராணுவமற்றும்கடற்படை அதிகாரிகளில் சிலர் மட்டுமே அடையாளம் இடப்பட்டுள்ளனர். பொறுப்புக்கூறல்விடயத்தில் இரண்டாம் படியில் உள்ளவர்களே இவர்கள். இவர்களுக்கு மேல் மகிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபய ராஜபகச் ஆகியோர் இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற வகையிலும் இவர்களுக்குக் கீழ் பணியாற்றிய இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் பலரும் கட்டளைகளை நிறைவேற்றியவர்கள் என்ற வகையிலும் பொறுப்புக்கூறலுக்குள் உள்வாங்கப்படுபவர்களாக இருப்பார்கள்.

அமெரிக்கா ஏற்கனவே இத்தகைய தடைகளை விதித்துள்ளது. கனடாவும் மகிந்த, கோட்டா உள்ளிட்ட நால்வர் மீது தடைகளை விதித்துள்ளது. இவ்வாறு தடை விதிக்கப்பட்டவேண்டியவர்கள் என்ற வகையில் 60 பேர் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். பல நாடுகளின் அரசுகளுக்கும் இவர்களின் பெயர்ப் பட்டியல்கள் அனுப்பப்பட்டுள்ளன. பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை தொடர்ந்தும் அலட்சியம் காட்டி வருமானால் இவர்கள் மீதும் அடுத்தடுத்துத் தடைகள் இந்த நாடுகளாலும் ஏனைய நாடுகளாலும் விதிக்கப்படும்.

மாற்றத்தை வாக்குறுதியாகத் தந்து ஆட்சியைப் பிடித்த அநுர இப்போது மாற்றத்திலிருந்து விலகிச் செல்கிறார், பழைய சிங்கள, பௌத்த பேரினவாதத்திற்கு அணுக்கமான ஆட்சியையே வழங்கப் பார்க்கின்றார் என்பதற்கான தெளிவான சாட்சியமே இந்தத் தடை. உறுதியான இந்தச் செய்தியுடனாவது மாற்றம் வருமா?

.**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பாகச் செயற்படும் துணை இராணுவப் படையான 'கருணா குழு'வை வழிநடத்திய வருமான 'கருணா அம்மான்' என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோருக்கு எதிராகவே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பிரிட்டன் வெளியுறவு, பொதுநலவாய அபிவிருத்தி விவகாரங்களுக் கான வெளியுறவுச் செயலாளர் டேவிட் லம்மி விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான நபர்களுக்கு பிரிட்டன் இன்று (நேற்று) தடைகளை விதித்துள்ளது.

உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான முன்னாள் இலங்கைத் தளபதிகள் மற்றும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ) முன்னாள் தளபதி ஆகியோர் மீது பிரிட்டன் இந்தத் தடைகளை விதிக்கிறது.

உள்நாட்டுப் போரின்போது செய்யப்பட்ட கடுமையானமனிதஉரிமைமீறல்கள்மற்றும் முறைகேடுகளுக்கான பொறுப்புக்கூறலைக் வலியுறுத்துவதையும், தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் கலாசாரத்தைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

புதிய இலங்கை ஆளும்தரப்பின் தேசிய ஒற்றுமைக்கான உறுதிமொழிகளை வரவேற்று, மனித உரிமைகள் தொடர்பாக அதனுடன் இணைந்து பணியாற்றுவதற்கு பிரிட்டன் உறுதிபூண்டுள்ளது.

இலங்கை உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான நான்கு நபர்கள் மீதே பிரிட்டன் அரசு தடை விதித்துள்ளது. இந்த மீறல்களில் நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை ஆகியவையும் அடங்குகின்றன.

பிரிட்டனால் தடைவிதிக்கப்பட்ட நபர்களில் முன்னாள் மூத்த இலங்கை இராணுவத் தளபதிகளும், இலங்கை இராணுவத்தின் சார்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயல்படும் துணை ராணுவப் படையான கருணா குழுவை வழிநடத்திய முன்னாள் விடுதலைப்புலிகளின் இராணுவத்தளபதியும் அடங்குவர்.

இந்தத் தடையின் கீழ் நால்வரும் பிரிட்டனுக்கு வருகைதருவதற்கான பயணத் தடை விதிக்கப்படுவதுடன் பிரிட்டனில் உள்ள அவர்களின் சொத்துக்களும் முடக்கப்படும். இத்தகைய நடவடிக்கைகள், உள்நாட்டுப்போரின் போது நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற பல்வேறு மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்குப் பொறுப்பான நபர்களையே குறிவைக்கின்றன - என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

''இலங்கைச் சமூகங்களில் இன்று வரைக்கும் தாக்கத்தைச் செலுத்துவதாக இருக்கும் கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்கான பொறுப்புக்கூறுதலைஉள்ளடக்கி, இலங்கையில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதில் பிரிட்டன் அர்ப்பணிப்போடு இருக்கின்றது'' என்று பிரிட்டன் வெளியுறவு, பொதுநலவாய அபிவிருத்திவிவகாரங்களுக்கானவெளியுறவுச் செயலாளர் டேவிட் லம்மி தெரிவித்துள்ளார்.

''இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பா னவர்களுக்கு தண்டனை விலக்களிக்கப் படுவதற்கு நான் இடமளிக்கமாட்டேன் என்று எனது தேர்தல் பரப்புரையின்போது உறுதியளித்திருந்தேன். தற்போதைய இந்த முடிவு, கடந்த கால மனித உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகளுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்கிறது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக புதிய இலங்கை ஆளும்தரப்புடன் இணைந்து பணியாற்ற பிரிட்டன் தயாராக இருக்கின்றது, மேலும் தேசிய ஒற்றுமை குறித்த அவர்களின் உறுதிமொழிகளையும் வரவேற்கிறது''- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் நியமனம் பற்றிய பரிந்துரைக்கும் குழு அனுமதி வழங்கியது.

அதற்கமைய, கியூபா குடியரசுக்கான இலங்கைத் தூதுவராக .ரத்நாயக்க முதியன்சலாகே மஹிந்த தாச ரத்னாயக்க , ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் பிவித்துரு ஜனக் குமரசிங்க ஆகியோரின் பெயர்களையும் உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

அத்துடன், ஐக்கிய இராச்சியம் மற்றும் வட அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக திசேனாதீர துமுன்னகே நிமல் உபாலி சேனாதீரவின் பெயரை உயர் பதவிகள் பற்றிய குழு பரிந்துரைத்துள்ளது.

மேலும், ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த சந்திரசிறி ஜயசூரியவின் பெயரை குழு பரிந்துரைத்துள்ளது.

பிரதமர் ஹரிணி தலைமையில் கூடிய உயர் பதவிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, குமார ஜயக்கொடி அனில் ஜயந்த, ஹினிதும சுனில் செனவி, பிரதியமைச்சர் ஹன்சக விஜேமுனி நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, சமிந்திராணி கிரிஎல்லே ஆகியோர் கலந்துகொண்டனர்.

## 10 லட்சம்........

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

2013ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கத்தினூடாக பல குற்றவாளிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றவாளிகளின்முகங்களைஅடையாளங் காண்பதற்கான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்

## 2 கொலைச் .....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு துப்பாக்கிதாரிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களைக் கைது செய்வதற்காக சிறப்பு பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தேவேந்திரமுனை ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் தெற்கு நுழைவாயில் முன்புறம் உள்ள சிங்காசன வீதியில் கடந்த வெள்ளிக்கிழமைஇரவு, இரண்டுஇளைஞர்கள் துப்பாக்கியால் சுட்டு கொல்லப்பட்டனர்.

வான் ஒன்றில் வந்த மூன்று நபர்கள் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் என்றும் அவர்களில் இருவர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தசம்பவம்தொடர்பாகஒருபெண்உட்பட நான்கு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு, தற்போதுபொலிஸ்தடுப்புக்காவல்உத்தரவின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

சந்தேகநபர்களில் ஒருவர், கொல்லப்பட்ட இளைஞர்களின்நெருங்கியநண்பன்எனவும், துப்பாக்கிச்சூட்டுக்குப்பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாகனத்தில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருந்த பிரபல தொலைபேசி நிறுவனத்தில் பணிபுரிபவர் எனவும் தெரியவந்துள்ளது.

அந்த வான் வாகனம் தொடர்பான விசாரணைக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பெண், கொலைக்கு ஒப்பந்தம் எடுத்தவர் என்று சந்தேகிக்கப்படும் நபரின் 30 வயது மனைவியாவார்.

அவர் கொலைக்கு உதவி செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டுள்ளார். இந்த கொலையை திட்டமிட்டு நடத்தியவர் எனப்பொலிஸார்சந்தேகிக்கும்தெஹிகெதர பாலே என்பவரின் உறவினரும் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் 46 வயதுடைய வியாபாரி.

நான்காவது சந்தேக நபர், துப்பாக்கி தாரிகளுக்கு தங்குமிடம் வழங்கியதற்காக கடுகமபிரதேசத்தில்வைத்துகைதுசெய்யப்பட்ட நிலையில், பாலே மல்லி என்பவரின் போதைப்பொருள் வலையமைப்பை இலங்கையிலிருந்து இயக்கும் நபர் என குறிப்பிடப்படுகிறது.

## இனவாதிகளுக்கு ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில்அவ்விடத்தைவிட்டுவெளியேறுமாறு இராணுவத்துக்கு கட்டளை பிறப்பித்தது யார்? ஜனாதிபதி, பாதுகாப்பு பிரதி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் இராணுவத்தளபதி ஆகியோருக்கு மாத்திரமே அதற்கான அதிகாரம் உண்டு. ஆகவே இதன் உண்மைத் தன்மையை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும்.

சிங்கள பௌத்த நாட்டில் பௌத்த விகாரையின் பூஜைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இனவாதிகளுக்கு ஆளும்தரப்பு அடிபணிந்து செயற்படுகிறது. இது ஆளும்தரப்பின் கோழைத்தனத்தை வெளிப்படுத்துகிறது. தையிட்டி திஸ்ஸ விகாரையில் மத வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிப்பது ஒட்டுமொத்த சிங்கள பௌத்தர்களின் மனங்களையும் பாதித்துள்ளது.

வடக்கில் பௌத்த மத உரிமைகள் மறுக்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தை இனவாதிகளுக்கு ஆளும்தரப்பு வழங்கி விட்டதா என்று எண்ணத்தோன்றுகிறது. இதனை மறைப்பதற்காகவா தலதா மாளிகை உற்சவம் நடத்தப்படுகிறது?

அரசமைப்பின் 9 ஆவது உறுப்புரையில் பௌத்த மதம் போசிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பௌத்த மதத்துக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்குவது வன்மையாக கண்டிக்கத்தக்கது - என்றார்.

## மின்சார....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னொரு விடயத்தையும் கூறுகின்றனர். நாட்டின் மின்சக்தி துறை மறுசீரமைக்கப்பட வேண்டும். இத்துறையில் தேசிய மற்றும் சர்வதேச முதலீடுகள் ஈர்க்கப்பட வேண்டும். ஆளும்தரப்பால் மாத்திரம் இத்துறையை நவீனமயப்படுத்த முடியாது.

மின்சாரத்துறை நவீனமயப்படுத்தல் நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் அமையவேண்டும். ஊழியர்களின் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரச சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மறுசீரமைப்பின்போது இந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதனை விடுத்து மீண்டும் பழைய நிலைமைக்கே செல்லக்கூடாது. ஆனால் ஆளும்தரப்பு பழைய பாதையிலேயே திரும்ப பயணிக்கின்றது.

அதானி நிறுவனத்தின் காற்றாலை மின்உற்பத்தி திட்டம் ஊழல் நிறைந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. விலைமனுகோரப்படவேண்டும்என்றுநாட்டில் சட்டம் காணப்படும் நிலையில், விலைமனு கோரல் இன்றி அந்த நிறுவனத்துக்கு இந்த திட்டம் வழங்கப்பட்டுள்ளமை தவறாகும்.

இந்ததிட்டத்திலிருந்துஅதானிவிலகினாலும், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்திலிருந்து விலகவில்லை. இவ்வாறு அதானி நிறுவனத்தைத் தவிர

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்திய ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் 38 வருடங்களின்பின் இறுதிக்கிரியைகள்

இந்திய அமைதிப்படையினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தாயினதும் சகோதரனதும் எலும்புக்கூட்டு எச்சங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை பிள்ளைகள் இந்து சமய முறைப்படி இறுதிக் கிரியைகளை நிறைவேற்றியுள்ளனர்.

இந்திய அமைதிப்படையினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த 1987ஆம் ஆண்டு கால பகுதியில் பெண்ணொருவரையும் அவரது மகனையும் இந்திய இராணுவத்தினர் சுட்டு படுகொலை செய்தனர்.

அக்கால பகுதியில் இந்திய இராணுவத்தினருக்கு அஞ்சி, அப்பெண்ணின் கணவன் தனது ஏனைய பிள்ளைகளின் உயிரை காப்பாற்றும் நோக்குடன், வீட்டின் வளவினுள் தனது மனைவி மற்றும் உயிரிழந்த பிள்ளையின் சடலங்களை புதைத்து, அதற்கு நடுகல் நாட்டியிருந்தார்.

அதன் பின்னர், சிறிது காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்து தனது ஏனைய பிள்ளைகளுடன் வெளிநாடொன்றுக்கு இடம்பெயர்ந்து சென்று, அங்கு வசித்துவந்தார்.

அதன்போது, தனது மனைவி, பிள்ளையின் சடலங்களை மீள எடுத்து, இந்து சமய முறைப்படி தகனக் கிரியை செய்ய வேண்டும் என தனது மற்றைய பிள்ளைகளிடம் கூறி வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் சில மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டில் காலமான நிலையில், தமது தந்தையின் ஆசையை நிறைவேற்றும் முகமாக, யாழ்ப்பாணம் திரும்பிய பிள்ளைகள், தமது தாய் மற்றும் சகோதரனின் சடலங்களை மீள தோண்டி எடுப்பதற்கு, நீதிமன்றத்தில் அனுமதி கோரி வழக்கு தொடர்ந்தனர்.

அவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் சடலங்களை தோண்டி எடுக்க அனுமதி வழங்கியுள்ளது.

அதனையடுத்து, தாய் மற்றும் தமது சகோதரனின் எலும்புக் கூட்டு எச்சங்களை மீள தோண்டி எடுத்து, ஞாயிறு இந்து சமய முறைப்படி இறுதிக் கிரியைகளை செய்துள்ளனர்.

## திருடி மதுபானம் வாங்கிய நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் 95ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஏ.ரி.எம் அட்டைகளை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் உள்ளிட்ட நால்வரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் பணம் மற்றும் ஏ.ரி.எம் அட்டைகள் திருடப்பட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், வீட்டின் பாதுகாப்பு கமெராக்களை சோதனை செய்ததன் அடிப்படையில் வீட்டில் பணிபுரிந்த பணிப்பெண்ணை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

விசாரணையில் குறித்த பணிப்பெண்ணும் மூன்று ஆண்களும் இணைந்து இந்த வீட்டில் திருடியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், திருடிய பணத்தில் 20 ஆயிரம் ரூபாவுக்கு மதுபானம் வாங்கி அருந்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் நால்வரும் யாழ் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

## ராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து வவுனியாவில் திடீர் சுற்றி வளைப்புக்கள்

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து திடீர் சுற்றி வளைப்பு மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்பட்டு நபர்களை கைது செய்தல் மற்றும் போதைப் பொருளை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த விசேட நடவடிக்கை நேற்று (திங்கட்கிழமை) மாலை மேற்கொள்ளப்பட்டது.

வவுனியாசிரேஸ்ட பொலிஸ்அத்தியட்சகர்சோமரத்னவிஜயமுனியின் ஆலோசனைக்கு அமைய வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில் சிரேஸ்ட பொலிஸ் பரிசோதகர் விஜயவன்ஸ தலைமையில் இந்த நடவடிக்கை சுமார் 3 மணி நேரம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, வவுனியா தேக்கவத்தை ஆலடி சந்தியில் இருந்து தேக்கவத்தை மைதானம் வரையிலான பகுதியில் விசேட தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தில் பிடிவிறாந்து பிறபு;பிக்கப்பட்டவர்களை கைது செய்தல், குற்ச் செயல்கள் தொடர்பில் தேடப்படும் நபர்களை கைது செய்தல், போதைப் போருள் பாவனையை கட்டுப்படுதல் போன்ற திட்டங்களுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நடவடிக்கையில், பொலிசாருக்கு உதவியாக இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 100



யாழில் மின்கலங்களை திருடிய குற்றச்சாட்டில்

## கடற்படைச் சிப்பாய் உட்பட ஐவருக்கும் விளக்கமறியல்



யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் மின்கலங்களை தொடர்ச்சியாக திருடிவந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கடற்படையின் முன்னாள் சிப்பாய் உட்பட ஐந்து பேரையும் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கைத்தொலைபேசிதொலைத்தொடர்பு வலையமைப்புக்களின் தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு பொருத்தப் பட்டிருந்த மின் கலங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கோபுரங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்குரிய பொலிஸ் நிலையங்களில் இந்த நிறுவனங்கள் முறைப்பாடுகளை பதிவு செய்திருந்தன.

முறைப்பாடுகளின் பிரகாரம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளின் தர்சனா தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், மின்கலன்களை திருடியவர்கள் அம்பாறை பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற விசேட பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை அம்பாறையில் இருந்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்று, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தவேளை கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படை முன்னாள் சிப்பாய் என்பதும், மற்றுமொருவர் களவாடப்பட்ட மின்கலங்களை கொள்வனவு செய்தவர் என்பதும் ஏனைய மூவரும் திருட்டுக்கு உடந்தையாக செயற்பட்டவர்கள் என்பதும் தெரியவந்துள்ளன.

சந்தேக நபர்கள் யாழ்ப்பாணத்தில் மாத்திரம் 192 மின்கலங்களை திருடியுள்ளனர் எனவும் திருடப்பட்ட மின்கலம் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், ஐவரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதேவேளை திருடப்பட்ட மின்கலங்களை பொலிஸார் கைப்பற்றியதோடு, அவற்றை நீதிமன்றில் சான்றுப் பொருள்களாக ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தையிட்டியில் சட்டவிரோத கட்டடத்தை திறந்துவைத்த வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் தனபால

யாழ்ப்பாணத்தில் தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையான திஸ்ஸ விகாரையில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட மண்டபம் ஞாயிற்றுக்கிழமை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தனபாலவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்தி, சட்டவிரோதமான முறையில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ள நிலையில், விகாரையை அகற்றி, தமது காணிகளை தம்மிடம் கையளிக்குமாறு காணி உரிமையாளர்கள் கோரி வருவதுடன், போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும், விகாரை நிர்வாகம், இராணுவத்தினின் ஒத்துழைப்புடன், மடாலயம் ஒன்றை எவ்வித அனுமதியும் பெறாது சட்டவிரோதமான முறையில் அமைத்து ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சட்ட ஒழுங்கை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய பொலிஸார் அசமந்தமாக செயற்பட்டு வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், சட்டவிரோத கட்டடத்தை வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தனபால திறந்து வைத்துள்ளார்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபடும் மக்களை தொடர்ந்தும் பொலிஸார் அச்சுறுத்தி வருகின்றனர். தமது காணிகளை கேட்டு போராடும் மக்களுக்கு எதிராக பிணையில் வெளியில் வர முடியாத சட்டத்தின் கீழ் வழக்குகளை தொடரவும் முயற்சித்து வந்தனர்

இந்நிலையில், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தற்போதே மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இவ்வாறான நிலையில் விகாரை நிர்வாகத்தின் சட்ட ரீதியற்ற செயற்பாடுகளுக்கு பொலிஸார் தொடர்ந்தும் துணை போவது குறித்து காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

### தடையும் தாற்பரியமும்

இலங்கையின் நீண்ட மற்றும் வேதனையான உள்நாட்டுப் போர் மே 2009 இல் அதிகாரப்பூர்வமாக முடிவடைந்தது, ஆனால் மிருகத்தனமான மோதலால் ஏற்பட்ட வடுக்கள் தொடர்ந்தும் ஆற்றப்படாமலேயே இருக்கின்றன. மோதலின் இறுதிக் கட்டங்களில் செய்யப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு உலக சமூகத்தின் பதில் புதுப்பிக்கப்பட்ட தீவிரத்துடன் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. இலங்கை அரசின் பொறுப்புக்கூறலுக்கான விருப்பமின்மையின் மீதான மற்றொரு தாக்குதலாக பிரிட்டன் இலங்கைப் படைகளின் முன்னாள் தளபதிகள் மீதும் கருணா மீதும் விதித்த தடைகள் அமைந்துள்ளன.

இலங்கையின் மூத்த இராணுவத் தளபதிகள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிராக ஏற்கனவே அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகள் தடைகளை விதித்திருக்கும் நிலையில் தற்போது பிரிட்டனும் நால்வர் மீது தடை விதித்துள்ளது. பொறுப்புக்கூறலுக்கான தொடர்ச்சியான தேடலில் சர்வதேசத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அழுத்தத்தை வெளிப்படுத்துகின்றது.

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில் கடுமையான மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நான்கு முக்கிய நபர்களுக்கு எதிராக பிரிட்டன் மார்ச் 24, 2025 அன்று தடைகளை விதித்துள்ளது. இலங்கை ஆயுதப் படைகளின் முன்னாள் தலைமைத் தளபதி ஷவேந்திர சில்வா, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூர்யா, மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் (ஸிவீவீசி) முன்னாள் தளபதியாக இருந்து பின்னர அரச ஒட்டுக்குழுவாக மாறிய கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது இந்தத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் உள்ளிட்ட இந்தத் தடைகள், சர்வதேச சமூகத்தின் உறுதியான சமிக்ஞை என்பதை கொழும்பு புரிந்துகொள்வது கட்டாயம்.

இந்த விடயத்தில் அமெரிக்காவும் ஒரு வலுவான நிலைப்பாட்டை எடுத்துள்ளது. 2020 முதல், சவேந்திர சில்வா, சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி, சுனில் ரத்நாயக்க மற்றும் பிரபாத் புலத்வத்தே ஆகியோர் மீது அது தடை விதித்துள்ளது. நீதிக்குப் புறம்பான கொலைகள், கட்டாயமாக காணாமல் போதல்கள் மற்றும் பிற மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அமெரிக்கா இந்தத் தடையை விதித்தது. கனடாவும் 2023 ஜனவரியில் இதைப் பின்பற்றி, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோர் மீதும் மிருசுவில் படுகொலையாளியான ரத்நாயக்க மற்றும் கடற்படைப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான ஹெட்டியாராச்சி ஆகியோருக்குத் தடைகளை விதித்தது.

சர்வதேசத்தின் இந்த நடவடிக்கைகள் போர் முடிந்து சுமார் ஒன்றரை தசாப்தத்தின் பின்னரே வந்துள்ளன. சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்டம் (ஞூவீமூஊண) போன்ற மனித உரிமை அமைப்புகளின் விரிவான ஆவணங்கள், போரின் இறுதி மாதங்களில் இறந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளன. போரின் இறுதி நாள்களில் இடம்பெற்ற நீதிக்குப் புறம்பான கொலைகள், கட்டாயமான காணாமலாக்கப்படுதல்கள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை பற்றிய அறிக்கைகள் போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள் நடத்தப்படும் என்று மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்புக்கள் எல்லாம் உறுதியளித்தபோதும் அது நிறைவேற்றப்படவேயில்லை.

இலங்கை ஆளும்தரப்பு போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளை தொடர்ந்து நிராகரித்து வருகிறது, தனது படையினர் மீதான தடைகள் அரசியல் ரீதியாக நோக்கம் கொண்டவை மற்றும் நியாயமற்றவை என்றும் அது கூறுகிறது. சர்வதேச நீதி விசாரணைக்குச் செல்லமாட்டோம் என்பதில் பிடிவாதமாக இருக்கும் ஆளும்தரப்பு உள்நாட்டு விசாரணையைக்கூட நடத்தவில்லை என்பதே மிகப் பெரிய சிக்கல்.

தற்போதைய தடைகள் முடிவு அல்ல, ஆனால் சுயபரிசோதனைக்கான அழைப்பு, இனங்களுடனான இணக்கத்திற்கான மு-யற்சி, நேர்மையான சிந்தனை ஆகியனவே இதுபோன்ற சிக்கல்களில் இருந்து இலங்கையைப் பாதுகாக்கக்கூடியவை. பொறுப்புக்கூறல் என்பது வெறும் வெளிப்புறக் கோரிக்கை அல்ல. அது இலங்கை மக்களில் ஒரு பகுதியினரிடமிருந்தே எழும் கோரிக்கை. அதனைப் புறப்பணிப்பது, அவர்களுக்கு நீதியை மறுப்பது அவர்களை மேலும் அந்நியமாக்கும். பொறுப்புக்கூறல் என்பது இதுபோன்ற இருண்ட அத்தியாயங்கள் மீண்டும் நிகழாமல் பார்த்துக் கொள்வதற்கான அத்திபாரம் என்பதை ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

# வைத்திருப்பவரையே அழிக்கும் பட்டலந்த என்ற மந்திரக்கோல்

உபுல் ஜோசப் பெர்னாண்டோ

பட்டலந்த சித்திரவதைக் கூடத்தை முதலில் அம்பலப்படுத்தியது 'ராவய' செய்தித்தாள். 17 ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சி ஆளும்தரப்பின் ஊழல் மற்றும் பயங்கரத்தை 'ராவய' செய்தித்தாள் வெளிப்படுத்தியது. இருப்பினும், இது சந்திரிகாவின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி செய்யப்பட்டதாகவே கூறப்படுகிறது. 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுடன் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி காமினி திசாநாயக்கவை பரிந்துரைத்தபோது, காமினி அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்தியதை 'ராவய' விளம்பரப்படுத்தியது. அந்த வெளிப்பாட்டுடன், சந்திரிகாவின் ஆளும்தரப்பு காமினிக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு ஆணையகத்தில் முறைப்பாடு அளித்தது.



இந்தக் காலகட்டத்தில் ரணில் சந்திரிகாவுடன் ஒரு ஒப்பந்தத்தில் இருந்தார். அது காமினியின் அரசியலை முடிவுக்குக் கொண்டுவருவதாகும். எதிர்க்கட்சித் தலைவர் தேர்தலில் காமினியிடம் ரணில் தோல்வியடைந்தபோது, இந்த ஒப்பந்தத்துக்கு ரணிலும் சந்திரிகாவும் இணங்கினர். காமினிக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யும் பணியை சந்திரிகா மேற்கொண்டார், அதே நேரத்தில் காமினியின் காலை இழுத்து அவரைத் தோற்கடிக்கும் பணியை ரணில் மேற்கொண்டார். புலிகள் காமினியைக் கொன்ற பிறகு, ரணில் ஐ.தே.க. மற்றும் எதிர்க்கட்சித் தலைவரானார். இதைத் தொடர்ந்து, 'ராவய' பட்டலந்த சித்திரவதை முகாம் பற்றி வெளிப்படுத்தியது, அதன் பின்னரே ரணில்தான் சந்திரிகாவின் இலக்கு என்ப நன்கு வெளிப்பட்டது.

பட்டலந்தவை 'ராவய' அம்பலப்டுத்தியதற்குப் பிறகு, சந்திரிகா ஒரு டஜன் ஜனாதிபதி ஆணைக்குழுக்களை அமைத்தார். அந்த ஆணைக்குழுக்கள் அனைத்தும் 17 ஆண்டுகால ஐ.தே.க. ஆளும்தரப்பைக் குறிவைத்தன. பட்டலந்த ஆணைக்குழு அவற்றில் ஒன்றாகும், ஐ.தே.க. ஆளும்தரப்பில் சக்திவாய்ந்த அமைச்சராகவும், அப்போதைய எதிர்க்கட்சியின் தலைமை அமைப்பாளராகவும் இருந்த விஜேபால மெண்டிஸ் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவும் அதில் ஒன்றாகும். விஜேபால மெண்டிஸ் மீதான ஊழல் குற்றச்சாட்டு, விஜயபாலவுக்குச் சொந்தமான அனுராதபுரத்தில் உள்ள தரிசு நிலத்தை தண்கொட்டுவவில் உள்ள வளமான தென்னை நிலத்திற்கு மாற்றிய குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டில் விஜயபால குற்றவாளி என்று ஜனாதிபதி ஆணைக்குழு கண்டறிந்தது. விஜேபாலாவின் குடிமை உரிமைகளை இல்லாது செய்ய ஜனாதிபதி ஆணையகம் பரிந்துரைத்தது.

விஜேபாலாவின் குடிமை உரிமைகளை நீக்குவதற்கான பிரேரணை 1997 ஒக்டோபர் கடைசிவாரத்தில் நாடாளுமன்றத்தில் கொண்டுவர திட்டமிடப்பட்டது. இது அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட இருந்தது. விஜேபாலாவின் குடிமை உரிமைகளை ஒழிப்பதற்கான ஒரு திட்டம் சிறிகொத்தாவிலும் அதே காலத்தில் வெடித்தது. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் மற்றும் கட்சியின் செயலாளர் காமினி அதுக்கோரல உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், விஜேபாலவைக் கட்சியிலிருந்து நீக்கவேண்டும் அல்லது அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்க வேண்டும் அல்லது அவரது குடிமை உரிமைகளை நீக்கும் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் என்று நினைத்தனர். ஏனெனில் 1994 இல் ஐ.தே.க. தோல்வியடைந்ததற்குக் காரணம் கட்சியின் பயங்கரவாதம் மற்றும் ஊழல் வரலாறு என்றும், அந்த வரலாற்றுடன் தொடர்புடைய கட்சியின் மூத்த தலைவர்கள் ஒவ்வொன்றாக நீக்கப்பட்டு கட்சி சுத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அவர்கள் நம்பினர்.

கட்சியின் பயங்கரவாதம் மற்றும் ஊழல் வரலாற்றுடன் ரணில் நேரடியாக தொடர்புடையவராக இருந்தபோதிலும், இந்தக் கருத்தை ரணிலும் அப்படியே ஏற்றுக்கொண்டார். விஜேபால மெண்டிஸ் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்து அவரைக் கட்சியிலிருந்து நீக்க, கட்சியின் செயலாளர் காமினி அதுக்கோரல தலைமையில் செயற்குழுவுடன் ஒரு குழுவை ரணில் நியமித்தார். விஜேபாலவை கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று அந்தக் குழு முடிவு செய்தது. இந்த முடிவு கட்சியின் மூத்த தலைவர்களை கோபப்படுத்தியது. கட்சியின் முன்னாள் தலைவரும் மூத்த தலைவருமான ஹமீட், ஜனாதிபதி ஆணையத்தால் விஜேபால மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும்வரை விஜேபால பாதுகாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். இருப்பினும், ரணில் விஜேபாலவுக்கு எதிராக ஒழுக்காற்று குழு விசாரணையைத் தொடங்கியபோது, ஹமீத் அந்தக் குழுவிலிருந்து விலகினார்.



விஜேபாலவிற்கு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பண்டாரநாயக்கவும் ஆதரவளித்தார். எம்.எச். முகமது, பெஸ்டஸ் பெரேரா, தர்மதாசபண்டா, நந்தாமேத்யூ, ஏ.எம்.எஸ். அதிகாரி மற்றும் சுசில் முனசிங்க ஆகியோர் கட்சி விஜேபாலவைப் பாதுகாக்கவேண்டும் என்ற

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

## மஹிந்தாவும்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

தங்கள் கருத்தில் உறுதியாக இருந்தனர். விஜேபாலவின் குடிமை உரிமைகளை நீக்குவதற்கான அதிர்ச்சியூட்டும் திட்டத்தால் சிறிகொத்த எரிந்து கொண்டிருந்தபோது, ஜனாதிபதி ஆணையகத்தின் பரிந்துரைகளை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார். இருப்பினும், விஜேபாலவின் கட்சி உறுப்பினர் பதவியை துறக்குமாறு அதுகோரல குழு செய்த பரிந்துரையை செயற்குழு அங்கீகரித்தது.



சந்திரிகா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, விஜேபாலவின் சிவில் உரிமையை ரத்துச் செய்யும் விவகாரத்தில் ஐ.தே.கவில் ரணிலுக்கு எதிராக நின்றவர்களை தன் பக்கம் ஈர்ப்பதற்கு முயன்றார். அவரது பரப்புரை வெற்றி பெற்றது. இதற்கிடையில், விஜேபால ஆணையகத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. விஜேபால குற்றவாளி அல்லர் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. விஜேபாலவுக்கு நீதிமன்றக் கட்டணங்களை செலுத்தவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனால், விஜயபாலவை ஐ.தே.கவிலிருந்து வெளியேற்றியரணில்உள்ளிட்டகுழுவினர்மீதுகட்சிக்குள் குற்றம்சாட்டப்பட்டது. ஐ.தே.கவிற்குள் இந்த நெருக்கடி வெடித்தபோது அதிலிருந்து விஜயபால உள்ளிட்ட மூத்த தலைவர்களை வெளியேற்றுவதில் சந்திரிகா வெற்றி பெற்றிருந்தார். ஐ.தே.க. சரிந்து வீழ்ந்தது. இதற்கிடையில், பட்டலந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக் காலமும் முடிவடையும் நிலையில் இருந்தது. பட்டலந்த ஆணைக்குழு சந்திரிகாவின் அரசியல் கூட்டாளிகளான மங்கள மற்றும் எஸ்.பி.திசநாயக்க ஆகியோரால் வழிநடத்தப்பட்டது, மேலும் எஸ்.பி. ரணிலைக் கைது செய்யவோ அல்லது ரணிலின் குடிமை உரிமைகளை ரத்து செய்யவோ விரும்பினார். அந்த நேரத்தில் மங்களவின் கட்டுப்பாட்டில் இருந்த அரச ஊடகங்களில் முக்கிய தலைப்புச் செய்தி பட்டலந்த ஆணைக்குழு பற்றியதாக இருந்தது.

அந்தஆணைக்குழுமுன்பாகச்சாட்சியமளிக்கரணிலும் வரவேண்டியிருந்தது. ஐ.தே.கட்சி உறுப்பினர்களுடன் ரணில்சாட்சியமளிக்கச்சென்றார். ரணிலின்சாட்சியத்தால், சந்திரிகா ஆளும்தரப்பு ஊக்கம் பெற்றது. சந்திரிகாவின் ஆளும்தரப்பு திட்டமிட்டபடி ஆணைக்குழு அறிக்கையில் ரணிலின் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால், அறிக்கை குப்பைத் தொட்டிக்குச் சென்றது. ரணிலை சிறையில் அடைத்து அவரது குடிமை உரிமைகளை ரத்து செய்யக் காத்திருந்த மங்களவும் எஸ்.பி.திசநாயக்கவும் வாயடைத்துப் போனார்கள்.

பட்டலந்த அறிக்கை வெளியிடப்பட்டபோது, 'ராவயா' செய்தித்தாளும், பட்டலந்த சித்திரவதை முகாமை அம்பலப்படுத்திய 'ராவயா'வின் ஆசிரியர் விக்டர் ஐவனும் ரணிலுடன் இருந்தனர். இந்த நேரத்தில், ராவயவின் முக்கிய எதிரி தலைமை நீதிபதி சரத் என்.சில்வா. 'ராவய' பத்திரிகை, தலைமைநீதிபதிக்குஎதிரானகுற்றச்சாட்டுகளை அச்சமின்றி வெளியிட்டது. ரணில் தலைமை நீதிபதிக்கு எதிராக ஒரு பதவி நீக்கத் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் விரும்பினார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களை அதற்கு சம்மதிக்க வைக்க அவர் முயற்சித்தார், ஆனால் ரணில் பின்வாங்கினார். சந்திரிகாவின் ஆளும்தரப்பின் அரசியல் திட்டத்தைத் தோற்கடிக்க, பட்டலந்த ஆணைக்குழு விசாரணையின்போது, சட்டமா அதிபராக இருந்து பின்னர் தலைமை நீதிபதியான இருந்தவரான சரத் என். சில்வாவுடன் ரணிலுக்கு ஓர் இரகசிய ஒப்பந்தம் இருந்ததே காரணம் என்று விக்டர் குற்றஞ்சாட்டினார்.

பிரதம நீதிபதியின் மீதான பதவி நீக்கத் தீர்மானத்தை ரணில் நாசப்படுத்தியதால், விக்டர், ஐக்கிய தேசியக் கட்சியின்துணைத்தலைவர்கருஜெயசூரியமற்றும்பொதுச் செயலாளர் காமினி அதுகோரல ஆகியோருடன் சேர்ந்து ரணிலுக்கு எதிராக ஒரு கிளர்ச்சியைத் தொடங்கினார். சரத் என். சில்வாவை பதவி நீக்கம் செய்ய ரணில் ஒப்புக்கொண்டபோது கிளர்ச்சி அடக்கப்பட்டது. இருப்பினும், பதவி நீக்கத் தீர்மானத்தை விசாரிக்க அனுமதிக்காமல் சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதைத் தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் ரணில் பிரதமரானார். சரத் என்.சில்வாவை பதவி நீக்கம் செய்ய விக்டர் இவன் மீண்டும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

கரு அதற்காக ஒரு பெரிய போராட்டத்தைத் தொடங்கினார். ஆனால் சரத் என். சில்வாவை நீக்க ரணில் விரும்பவில்லை. அப்போதும்கூட, விக்டர் மட்டுமல்ல, பல கட்சி உறுப்பினர்களும் பட்டலந்த தொடர்பாக ரணிலுக்கும் சரத் என். சில்வாவுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் இருக்கின்றனர் என்று கூறினர். உண்மை என்னவாக இருந்தாலும், இறுதியில், பட்டலந்த அறிக்கை மூலம் ரணிலைச் சிறையில் அடைக்க விரும்பிய எஸ்.பி.திசநாயக்க, மங்கள மற்றும் சந்திரிகா ஆகியோர்கூட பின்னர் ரணிலுடன் இணைந்தனர்.

பட்டலந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்று முனைப்போடு இருந்தவர் விஜயபால மெண்டிஸ். ஜனாதிபதி ஆணைக்குழு அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியபோது, ஊழலில் இருந்து கட்சியைப் பாதுகாக்க அவரை கட்சியிலிருந்து வெளியேற்றியவர் ரணில். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை தனக்கு எதிராகப் பயன்படுத்தியதற்காக விஜயபால மீது ரணில் மிகுந்த கோபத்தில் இருந்தார். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மூலம் சந்திரிகா ரணிலைச் சிறைக்கு அனுப்புவார் என்று நினைத்துத்தான் சந்திரிகாவுடன் இணைந்தார் விஜயபால மெண்டிஸ். அப்படி ரணிலைச் சிறைக்கு அனுப்பிய பின்னர் மீண்டும் ஐ.தே.க.வுக்குச் சென்று அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்றுநினைத்தார். ஆனால்ஆணைக்குழுஅறிக்கையை சந்திரிக்காகிடப்பில்போட்டபோதுஅவர்கள்கோபமடைந்தார்.

பட்டலந்த ஆணைக்குழு என்பது இலங்கை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்திய ஒரு மந்திரக்கோல். மந்திரக்கோல் தன்னைப் பயன்படுத்துபவர்களையே அழிக்கும் என்கிறு விசித்திரக் கதைகள் உண்ட. தற்போது ஆளும்தரப்பில் பிமல் ரத்நாயக்க அரசுத் தலைவர் அனுராவுக்குக் கொடுக்கும் பட்டலந்த மந்திரக்கோலால் யார் அழிக்கப்படுவார்கள் என்று இன்னும் சொல்ல முடியாதுள்ளது.



# பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தது தேசிய மக்கள் சக்தி

பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனுவை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று தொடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி நண்பகல் வரை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையில் நேற்றைய தினம் பூநகரி பிரதேச சபைக்கான வேட்பு மனுவை தேசிய மக்கள் சக்தி தாக்கல் செய்தது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன் தலைமையில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார், பூநகரி, தெஹியத்தகண்டி உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பும னுக்களை ஏற்கும் நடவடிக்கை இடம்பெறு கின்றமை குறிப்பிடத்தக்கது.

316




# ஆலோசகர்கள் நியமனம்

சர்வதேச மனித உரிமைகள் உலகலாவிய சேவைகள் அமைப்பின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணகத்திற்கான சிரேஷ்ட ஆலோசகர்களாக கலஹம தர்மரன்சி தேரர், சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, அல் செய்க் கலாநிதி ஹசன் மௌலானா, அருட்தந்தை நிஷான் குரே ஆகியோர்கள் நியமிக்கப்பட்டுள்ளர்கள்.

குறித்த நியமன கடிதங்கள் சர்வதேச மனித உரிமைகள் உலகலாவிய சேவைகள் அமைப்பின் தலைவர் கலாநிதி அமீர்கான் ஏற்பாட்டில் கொழும்பு வெள்ளவத்தை மெரைய்ன் கிரெண்ட் மண்டபத்தில் நடைபெற்ற இஃப்த்தார் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ் அவர்களால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

# தெலுங்கு சமூகத்தினருடன் பல சமூகத்தினர் இணையும் கலாசார நிகழ்வு அம்பாறையில்

(றிபாஸ்)

ஜீ.ஐ.செட். அமைப்பின் நிதி உதவி மூலம் விழுது நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட ஐடோ இளைஞர்களால் நடத்துப்பட்ட அலிக்கம்பை தெலுங்கு சமூகத்தினருடன் பல் சமயத்தவர் இணையும் கலாசார மைய நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பல் சமயத்தவர்களுடைய கலாசார, சமய முரண்பாடுகளை கலைந்து சிறந்த சமூக நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையிலான இந்நிகழ்வு அருட்தந்தை ஜெகனின் அனுமதியுடன் நடைபெற்றது.


அலிக்கம்பை கிராமத்தைச் சேர்ந்த மக்களுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மும்மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், சமய தலைவர்களும் கலந்துகொண்டனர்.

மும்மதங்களின் கலாசார விழுமியங்கள், பண்பாடுகள் தொடர்பான கருத்தாடல்கள் இங்கு நடைபெற்றதுடன் மும்மதங்களினதும் உணவுப் பழக்கவழக்கங்கள் தொடர்பான நடைமுறைகளும் அறிமுகப்படுத்துப்பட்டு அவரவர்களிடையே உணவு பரிமாற்றங்களும் நடைபெற்றன.

இந்நிகழ்வில் அலிக்கம்பை பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டதுடன் மும்மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் இது தொடர்பாக தங்களது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இன ஒற்றுமையையும் சமய நல்லிணக்கத்தையும் பரப்பும் வகையில் இந்த அமைப்பு ஒவ்வொரு மாவட்டங்களிலும் கடந்த காலங்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.







# கரைச்சி பிரதேச செயலக உதைபந்தாட்ட சம்பியன்



2025 ஆம் ஆண்டுக்கான கரைச்சி பிரதேச செயலக உதைபந்தாட்ட போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

கரைச்சி பிரதேச செயலக விளையாட்டுக்க ழகங்களுக் கிடையிலான 2025 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட தொடர் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய நிலையில் திங்கட்கிழமை இறுதிப்போட்டி நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஆனந்தபுரம் ஸ்ரார் ஈகில் விளையாட்டுக்கழகமும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதியிருந்தன.

90 நிமிடங்கள் கொண்ட விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப்பெற தண்டஉதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 4 இற்கு 3 என்ற கணக்கில் ஸ்ரார் ஈகில் விளையாட்டுக்கழகத்தைவீழ்த்திசம்பியனாகியது.

கரைச்சி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் இராசையா போல்ராஜ் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

பரிசளிப்புநிகழ்வில்உதவிப்பிரதேசசெயலாளர் , மாவட்ட உதை பந்தாட்ட சம்மேளன தலைவர் மற்றும் செயலாளர், முட்கொம்பன் மகா வித்தியாலய முதல்வர், மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கதலைவர் பிரதேசசெயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராமசேவையாளர் , பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். 316




# இப்தார் நிகழ்வு

(றிஸ்னாத் )



திருகோணமலை மாவட்ட கங்கதலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தால், ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த நல்லிணக்க இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கிண்ணியாவில்இடம்பெற்றது.

ஊடக ஒன்றியத்தின் இப்தார் குழுவின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான கியாஸ் ஷாபியின் தலைமையில், இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த மூன்று வருடங்களாகத் திருகோணமலை மாவட்டத்தில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு, வௌ;வேறு பிரதேசங்களில், இவ்வாறான இத்தார் நிகழ்வை, ஊடக ஒன்றியம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த நிகழ்வில், அதிதிகளாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்தினசேகர பிரதம அதிதியாகவும்,

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேமந்தகுமார சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இப்தார் சிந்தைனை, மௌலவி அஷ் ஷேஹ் ஷாபி (நூராணி) அவர்களால் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், சீனக்குடா விமானப்படை பொறுப்பதிகாரி, மாவட்ட சமூக அமைப்புகளின் தலைவர்கள், கல்வி அதிகாரிகள், வர்த்தகர்கள், ஊர்பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கிராம சேவகருக்கான உத்தியோகபூர்வ நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு அண்மையில் புதிதாகநியமனம்செய்யப்பட்ட கிராமசேவக்ர்களுக்கான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ நியமனக் கடிதம் மற்றும் இலட்சனை ஆகியன வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு நியமைக் கடிதம் மற்றும் கிராம சேவகர்களுக்கான இலட்சனைகளை வழங்கி வைத்தார்.

அண்மையில் தேசிய ரீதியாக இடம்பெற்ற கிராம சேவகர்கள் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 08 கிராம சேவகர் உத்தியோகத்தர்களும் சம்மாந்துறை-03,09,10, விளினையடி 03, மலையடிக் கிராமம், 01,02,03.04 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம் ஜெமில், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் நளிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.







# திருமலையில் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்.

(ஹஸ்பர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்தும்செயற்திட்டம் திருகோணமலை நகர சபை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுதிருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர் (மத்திய அரசாங்கம்) த.பிரணவன் தலைமையில் நடைபெற்றது.



இந் நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நாட்டுக்கு வரவில்லை. கடந்த காலங்களில் கோட்டாபயராஜபக்சவுக்குவாக்களித்தவர்களே இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கின்றனர்.

கடந்த தேர்தல்களில் பொதுஜன பெரமுன வேட்பாளர்களைகளமிறக்கவில்லை. ஆனால் இம்முறைஅவ்வாறல்ல. அவர்களதுவாக்குகள் மீண்டும் அவர்களுக்கே கிடைக்கப் பெறும்.

அந்த வகையில் இம்முறை பொதுஜன பெரமுனசுமார்15சதவீதவாக்குகளையேனும் பெற்றுக் கொண்டால், தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் அது குறைவடையும். அதேவேளை எமது வாக்குகளில் ஒன்றுகூட பொதுஜன பெரமுனவுக்கு கிடைக்காது.

அந்த வகையில் நாம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு சிறப்பாக தயாராகி வருகின்றோம். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களைவிட இம்முறை தேர்தலில் சிறந்த வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

## தமது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன்.

பிரிட்டிஷ் அயலுறவு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தின் இந்தோ- பசிபிக் பிராந்தியப் பணிப்பாளர் பென் மெல்லருக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றிருந்தது. இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே சுமந்திரன் மேற்கண்டறவாறு தெரிவித்தார்.

ஆளும்தரப்பு தேர்தலில் பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்தபோதும் அவற்றை இன்னமும் பூர்த்திசெய்யாத நிலைமைதான் நீடிக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டினார். வடக்கு, கிழக்கு மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக இலங்கையர்களும் ஆளும்தரப்பு வாக்குறுதியளித்த மாற்றத்திற்காகக் காத்திருக்கின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

இலங்கைப் போரில் இடம்பெற்ற மனித உரிமைமீறல்கள்தொடர்பில்பொறுப்புக்கூறல் செய்யப்படவேண்டும் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடாக இருக்கின்ற நிலையில், சாட்சியங்களை திரட்டும் பொறிமுறை முழுமையாகத் தனது பணியை முடிக்கும் வரையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் கால எல்லையையும் நீடிக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## பிரித்தானிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்றிருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் செப்டெம்பர் மாத 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானம் ஒன்றை பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படும் என்று இந்தச் சந்திப்பின்போது பென் மெல்லர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர், வடக்கு,கிழக்கில் உள்ள நிலைமைகள் மற்றும் புதிய ஆளும்தரப்பின் செயற்பாடுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் சுமந்திரனிடம் இருந்து கேட்டறிந்துகொண்டார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கீழ் செயற்படும் சாட்சியங்களை சேகரிக்கும் பொறிமுறையின்பணிமுடிவடையும்வரையும் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நீடிக்கப்படுவதன் அவசியம் குறித்து இந்தச் சந்திப்பில் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த அமர்வில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ளதீர்மானம்தொடர்பிலும் இரு தரப்பினரும் கலந்தாலோசித்துள்ளனர்.

இலங்கையில் 'நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தலை' நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் பிரிட்டன் தொடர்ந்தும் அக்கறை செலுத்தும் என்று பென் மெல்லர் இந்தச் சந்திப்பில் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் புதிய பிரேரணையை கொண்டுவருவதில் பிரித்தானியாகொண்டிருக்கின்றஅர்ப்பணிப்பை வரவேற்றார் சுமந்திரன்.

"தற்போதைய ஆளும்தரப்பு கடந்தகாலத் தவறுகளைச் சரிசெய்யும் முறைமை மாற்றத்தினை மையப்படுத்தியே ஆட்சியில் அமர்ந்தது. எனவே இந்த ஆளும்தரப்பினாலேயே அதற்கான இலக்குகளை முன்னகர்த்த முடியும்" என்றும் குறிப்பிட்டார்.

## உயிர்த்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் இரண்டாவது சாட்சியாகப் பெயரிடப்பட்ட கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் இப்ராஹிமின் வீட்டில் வேலைசெய்து வந்த பணிப்பெண்வெளிநாடுசென்றுவிட்டார்என்று தெரியவந்துள்ளது. மேலுமொரு சாட்சியாளர் வெளிநாடு செல்லும் அபாயம் இருப்பதாக வழக்கின் முறைப்பாட்டை வழிநடத்தும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, குறித்த சாட்சிக்கு புதிய அழைப்பாணை பிறப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, அந்த நபரின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான அறிக்கையினை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திலிருந்து அழைத்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்ட தற்கொலைக் குண்டுதாரிகளான இன்சாப் அஹமட் மற்றும் இல்ஹாம் அஹமட் பற்றிய தகவல்களை பாதுகாப்புப் படையினரிடமிருந்து மறைத்து பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்தார் எனக் கூறி, கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் இப்ராஹின் மற்றும் அவரது இரண்டு மகன்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர்
Kalaikkathir

# மரண அறிவித்தல்

மலர்வு 1964 06 23

உதிர்வு 2025 03 20



## அமரர். சுதந்திரன் (சுரேஸ்) பரராஜசிங்கம்

(Former Student of St. Peter's College)

கொழும்பு வத்தளையை பிறப்பிடமாகவும் உரும்பிராய் மற்றும் லண்டன் - **Spalding** ஐ வதிவிடமாகவும் கொண்ட சுதந்திரன் (சுரேஸ்) பரராஜசிங்கம் அவர்கள் 20-03-2025 வியாழக்கிழமை அன்று லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பரராஜசிங்கம் அருந்ததி அவர்களின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி னுச. குணரட்ணம் (முல்லைநகர் **clinic**, முல்லைத்தீவு), ஜெயஸ்வரி அவர்களின் பாசமிகு மருமகனும் அனுஷாவின் ஆருயிர்க் கணவரும் சங்கவி, ஜானவியின் பாசமிகு தந்தையும்

ஆனந்தி, சுமதி, சுகந்தி, சுகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்

சற்குணநாதன், சாந்தகுமார், வசந்தகுமார், சர்மைன் அவர்களின் மைத்துனரும் கஜேந்திரா, துஸ்யந்தன், துர்க்கா, வைஷ்ணவி மற்றும் லஷ்மியின் மாமாவும் றோஷனின் சித்தப்பாவும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக The Cressetல் வைக்கப்பட்டு பின்னர் தகனத்திற்காக **Peterborough Crematorium**க்கு எடுத்துச்செல்லப்படும்.

அஞ்சலி: **Wednesday, 26 Mar 2025 @ 3:00 pm**
**The Cresset**
**Rightwell E, Peterborough PE3 8DX, United Kingdom**

தகனம்: **Wednesday, 26 Mar 2025 @ 4:30 pm**
**Peterborough Crematorium**
**Mowbray Rd, Peterborough PE6 7JE, United Kingdom**

தொடர்புகளுக்கு:
+ 07453654083

# மன்னார் பெண் தொழில்முனைவோருக்கு ஜப்பான், ஐ.நா. பெண்கள் அமைப்பு ஆதரவு

பெண்களின் பொருளாதார வலுவூட்டலை மேம்படுத்தும் தொடர்ச்சியான முயற்சியில், இலங்கையில் உள்ள ஜப்பான் தூதரகத்தின் அமைச்சரும் துணைத் தலைவருமான காமோஷிடா நவோகி, 'சமாதானத்துக்கான பாதைகள்: இலங்கையில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு குறித்த தேசிய செயற்றிட்டத்தை நனவாக்குதல்' செயற்றிட்டத்தின் மூலம் ஆதரவளிக்கப்பட்ட மன்னார் மாவட்ட பெண் தொழில்முனைவோர்களை பார்வையிட்டார்.

கிறிசாலிஸ் நிறுவனத்துடன் பங்குதாரராக இணைந்து ஐ.நா. பெண்கள் அமைப்பால் அமுல்படுத்தப்படும், ஜப்பான் அரசாங்கத்தின் தாராளமான ஆதரவுடனான இந்த செயற்றிட்டமானது மோதலால் பாதிக்கப்பட்ட அனுராதபுரம், மட்டக்களப்பு, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் பெண்கள் தலைமையிலான வணிகங்களை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை மேற்கொண்டு வருகிறது.

ஜப்பான் அரசாங்கத்தின் 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியுடன், சுமார் 500 பெண் தொழில்முனைவோர் வணிகத் திட்டமிடல், நிதியியல் அறிவு மற்றும் உற்பத்திப் பொருளின் புத்தாக்கம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சிகள் மூலமாக தங்களது இயலளவை வெற்றிகரமாக மேம்படுத்தியுள்ளனர்.

இந்த இலக்கு பயிற்சிகள் அவர்களின் வணிக மாதிரிகளை மேம்படுத்த உதவுவதுடன், சந்தைகளுக்கான அணுகலை அதிகரிப்பதற்கான பயிற்சிகள் மற்றும் அவர்களின் செயற்பாடுகளில் நிலைபேண்தகு தன்மையை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவற்றையும் வழங்கியிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய காமோஷிடா நவோகி -

'பெண்களுக்கு அவசியமான திறன்களை வழங்குவதன் மூலமும், அவர்களின் இயலளவுகளை வெளிப்படுத்தி, நாம் சமூகங்கள் முழுவதும் எதிரொலிக்கும் நேர்மறையான மாற்றங்களை தூண்டலாம் என்பதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு புதிய உந்து சக்தியை உருவாக்க முடியும். பெண்களின் வலுவூட்டலுக்கும், இந்த நாட்டின் நிலைபேண்தகு, உள்ளடங்கலான அபிவிருத்திக்கு ஜப்பான் தொடர்ந்து தனது அர்ப்பணிப்பை வழங்குகிறது' என்று கூறினார்.

இந்த ஒத்துழைப்பானது பால்நிலை சமத்துவம் மற்றும் உள்ளடங்கலான அபிவிருத்திக்கான ஜப்பானின் நீண்டகால அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்டதுடன் நிலைபேண்தகு அபிவிருத்தி மற்றும் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலுக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் கீழ் பகிரப்பட்ட முன்னுரிமைகளை பிரதிபலிக்கின்றது.

பொருளாதார வலுவூட்டலுக்கான வழிவகைகளை உருவாக்குவதன் மூலம் இந்த முயற்சியானது இலங்கையில் நிலைபேண்தகு சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு பங்களிக்கிறது.



# விழிப்புணர்வு ஊர்வலத்திற்கு பொலிஸாரால் இடையூறு


வவுனியாவில் காச நோய் தொடர்பில் விழிப்புணர்வு பேரணி ஒன்று மேற்கொள்வதற்கு காச நோய் கட்டுப்பாட்டு பிரிவால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது அங்கு வந்த வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த ஊர்வலத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என வைத்தியர்களிடம் தெரிவித்தார்.

இதன்போது தாம் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இது தொடர்பில் தெரியப்படுத்தியதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். எனினும் போக்குவரத்து பொறுப்பதிகாரி அனுமதி வழங்க மறுத்தார்.

இந்தச் சம்பவத்தை அங்கு கடமையில் நின்ற ஊடகவியலாளர்கள் இருவர் ஒளிப்பதிவு செய்தனர். இதனையடுத்து குறித்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் வகையில் அழைத்து அவர்களது ஊடக அடையாள அட்டையை பெற்று அதனை பதிவு செய்து அவர்களது நடவடிக்கைக்கு இடையூறை ஏற்படுத்தினார்.

அத்துடன், குறித்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்த ஓட்டோக்களையும் அங்குநின்றபோக்குவரத்துபொலிஸாரிடம் கூறி, போக்குவரத்து பொறுப்பதிகாரி ஒளிப்பதிவு செய்திருந்தார்.





குறித்த ஊர்வலம் தொடர்பில் வைத்தியர்கள் பிரதி பொலிஸ்மா அதிபர், வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் தொலைபேசியில் கலந்துரையாடியதன் அடிப்படையில் போக்குவரத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கியிருந்தார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் அவர்களும் பிரதி பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடி இருந்தமை குறிப்பிடத்தக்கது. 100

# தாய்மொழி ஆசிரியர் தொழிற்சங்கத்தினர் வலயக் கல்விப் பணிப்பாளருடன் சந்திப்பு

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீ.புயல்நேசன் மற்றும் உப பொருளாளரும் யாழ் வலயக்கல்வித் தலைவருமாகிய சி.சிறீதரன் ஆகியோர் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் அவர்களை நேற்று (திங்கட்கிழமை) சந்தித்து யாழ். கல்வி வலயத்தில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடினர்.

2025 ஆம் ஆண்டில் யாழ் கல்வி வலயத்தில் மட்டும் நூற்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் புதிதாக இணைந்து கொண்டனர். அவர்களின் பெயர் விவரங்களையும் அங்கத்துவப் பணம் அறவிடப்படுவதற்கான விண்ணப்பப் படிவங்களையும் யாழ் கல்வி வலயத் தலைவர் சி.சிறிதரன் மற்றும் பொதுச் செயலாளர் ஸ்ரீ.புயல்நேசன் ஆகியோர் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

இலங்கை தாய்மொழி ஆசிரியர் சங்கங்கத்தின் பொதுச்செயலாளர் எதிர்காலத்தில் சங்கத்தின் நிலைப்பாட்டையும் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் எடுத்துரைத்த போது, அதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்தார்.

# யாழில் அதிகரிக்கும் இணைய நிதி மோசடி

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக பல்வேறு பகுதிகளிலும் இணையம் மூலமாக நிதி மோசடி இடம்பெற்று வருகின்றது. இதன்மூலம் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறான நிதி மோசடிகள் ஊர்காவற்துறை பகுதியில் மாத்திரம் நன்கு இடம்பெற்றுள்ள நிலையில் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குகளும் நடைபெற்று வருகின்றன. இந்த இணைய மோசடிகள் பல்வேறு வகையில் இடம்பெற்று வருகின்றன.

நிகழ்நிலை செயலி ஒன்றை மக்களிடையே பகிர்ந்து அதில் முதலீடு செய்யுமாறு ஊக்குவிக்கப்படுகிறது. அந்த செயலியில் ஆரம்பத்தில் சிறிய தொகையை முதலிடுவதன் மூலம் சிறிய அளவிலான கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

மக்கள் முதல் வருமானத்தை நம்பி அடுத்த தடவை பெரிய ஒரு தொகையை முதலீடு செய்யும் பட்சத்தில் அந்த நிதியானது மோசடியாளர்களால் அபகரிக்கப்படுகிறது.

மேலும், வங்கி கணக்கில் பணத்தை வைப்புச் செய்துள்ளவர்களது கணக்கு இலக்கங்கள் மற்றும் அடையாள அட்டை இலக்கங்கள் என்பன ஆசைவார்த்தை கூறி மக்களிடமிருந்து மோசடியாளர்களால் பெறப்படுகிறது.

பின்னர் அவர்களது கைபேசிக்கு இரகசிய இலக்கம் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து அந்த இரகசிய இலக்கமானது பெறப்பட்டு அவர்களது வங்கிக் கணக்கில் உள்ள பணம் மோசடி செய்யப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து காணப்படுகின்றன. ஊர்காவற்துறை நீதிமன்றத்திலும் இவ்வாறான வழக்குகள் காணப்படுகின்றபடியால் மக்களுக்கு இது குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்துமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.



# உலகக் காசநோய் தினத்தில் கல்முனையில் விழிப்புணர்வு

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கொன்று கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை நடைபெற்றது.

கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல். அப்துல் கபூர் தலைமையில் இந்த கருத்தரங்கு நடத்தப்பட்டது.

பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தின் வெளிச்சுவரில் காசநோய் விழிப்புணர்வு ஓவியம் வரைவதற்கு அனுசரணை வழங்கிய அனுசரணையாளர்களுக்கு கருத்தரங்கு நிகழ்வின்போது சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும், சிகிச்சை நிலையத்தின் வெளிச்சுவரில் கையெழுத்திடும் பலகை திறந்துவைக்கப்பட்டது. அதில் அதிதிகள் மற்றும் ஏனையவர்கள் கையெழுத்திட்டனர்.

இதன்போது கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல். அப்துல் கபூர் கூறுகையில் -

காசநோய் ஒரு காலத்தில் அதிகமான உயிரிழப்புக்களை ஏற்படுத்தி இருந்தது. அன்று முதல் இன்று வரை உலகளவில் ஒரு பாரிய தாக்கத்தை இந்நோய் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

தெற்காசிய நாடுகளில் இலங்கையில் குறைந்தளவு காசநோயாளர்கள் இருக்கின்றபோதிலும், உலக சுகாதார அமைப்பின் அறிவுறுத்தலுக்கு அமைய, இலங்கையில் 14 ஆயிரம் காசநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இன்று வரை இந்த எண்ணிக்கையிலான காசநோயாளர்களை அடையாளம் காண முடியாதுள்ளது.

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான நோயாளர்களே அடையாளம் காணப்படுகின்றனர்.

2024ஆம் ஆண்டில் 9,180 காசநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதேவேளை, நான்காயிரம் முதல் ஐயாயிரம் வரையான நோயாளர்கள் அடையாளம் காணப்படாமல் சமூகத்தில் உலாவிக்கொண்டிருக்கிறார்கள். இது காசநோய் நிலைமையை சமூகத்தில் மேலும் அதிகப்படுத்தும். அடையாளம் காணப்படாத காசநோயாளர்கள் 15 வரையிலான புது காசநோயாளர்களை உருவாக்குகின்றனர். இதனை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

















கல்முனை பிராந்தியத்தை பொறுத்தவரையில் சுமார் 60 வீதமான காசநோயாளர்களையே அடையாளம் காணக்கூடியதாக இருக்கிறது என தெரிவித்தார்.

இந்த கருத்தரங்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌசாத், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜி. சுகுணன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வாஜித், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# தேர்தல் வழக்குகள் இந்த வாரத்திலேயே விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் சாத்தியம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் நம்பிக்கை

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக பல சபைகளுக்கு அரசியல் கட்சிகளாலும் ,சுயேச்சைக் குழுக்களாலும் தாக்கல் செய்யப்பட்ட கணிசமான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில்தாக்கல் செய்யப்படும் வழக்குகளை இந்த வாரத்திலேயே விசாரித்து தீர்ப்பு வழங்கும் சாத்தியம் இருப்பதாக ,அவ்வாறான சில வழக்குகளில் உயர் நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைக்கவுள்ளவர்களில் ஒருவரான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் நம்பிக்கை தெரிவித்துள்ளார் .

அநேகமாக,அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பபட்ட உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எழுந்துள்ள சில சட்ட சிக்கல்கள் தொடர்பிலேயே பல கட்சிகளினாலும், சுயேச்சைக் குழுக்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் இம்முறை நிராகரிக்கப்பட்டுள்ளன.

இன்று (செவ்வாய்க்கிழமை) ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ,ஐக்கிய தேசிய கூட்டமைப்பு , தமிழரசுக் கட்சி ,தமிழீழ விடுதலை அமைப்பு போன்றவை உயர் நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்யவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் கட்சியின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மனுதாரராகவும்,அவ்வாறே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஐக்கிய தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றின் அடிப்படையில் அக் கட்சிகள் சேர்ந்து போட்டியிடவுள்ள சில சபைகளுக்கான நிராகரிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்களைப் பொறுத்தவரை பிரஸ்தாப கூட்டமைப்பின் செயலாளர் எம். நயீமுல்லாஹ் மனுதாரராகவும் இருக்கின்ற நிலையில் அவற்றுக்காகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் உயர் நீதிமன்றத்தில் வாதாடவுள்ளார்.

ஏனைய நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பில் அவற்றின் மனுதாரர்கள் சார்பில் வாதங்களை முன்வைக்க சட்டத்தரணிகள் உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாவர்.

# கசிப்பு விற்ற நபர் சுழிபுரத்தில் கைது

யாழ்ப்பாணம்,வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 26 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ஒருபோத்தல் கசிப்பு வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் – காரைநகர் வீதியில் போட்டிபோட்டு ஓடும் பஸ் சாரதிகள்

## அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம் - காரைநகர் வீதியில் போட்டி போட்டு ஓடும் தனியார் பஸ்களினால் பயணிகள் அச்சத்தில் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை கீரிமலையிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் சாரதியும், காரைநகரிலிருந்து யாழ்.நகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் சாரதியுமே போட்டி போட்டுக்கொண்டு பஸ்ஸை செலுத்தியுள்ளனர்.

இதில் கீரிமலையிலிருந்து யாழ். நகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் சாரதி சமிஞ்சை விளக்கினை



உரியமுறையில்பயன்படுத்திபஸ்ஸைசெலுத்தியபோதும் காரைநகரிலிருந்து யாழ்.நகர் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸின் சாரதி சமிஞ்சை விளக்கினை உரியமுறையில் பயன்படுத்தாது பஸ்ஸை செலுத்தியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2025இல் வெளியிடப்பெற்றது